## 70

# என்ன ஒரு நாள்!

## படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #29

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).
- E. செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்" (தொடர்ச்சி).
  - 2. அதிகாரத்துவம் பற்றிய கேள்வி:
    - a. கேள்வியும் இயேசுவின் பதிலும் (மத். 21:23-27; மாற். 11:27-33; லூக். 20:1-8).
    - b. அவரது பதிலில் ஒரு பகுதி: மூன்று உவமைகள்.
      - (1) இரண்டு மகன்கள் பற்றிய உவமை (மத். 21:28-32).
      - (2) பொல்லாத குத்தகைக்காரர்கள் பற்றிய உவமை (மத். 21:33-46; மாற். 12:1-12; லூக். 20:9-19).
      - (3) அரசர் மகனின் திருமண விருந்து பற்றிய உவமை (மத். 22:1-14).
  - 3. கேள்விகளின் வரிசைத் தொடர்:
    - a. வரிசெலுத்துதல் பற்றிப் பரிசேயர்களும் ஏரோதியர்களும் கேள்வி கேட்டல் (மத். 22:15-22; மாற். 12:13-17; லூக். 20:20-26).

## அறிமுகம்

ஒரு மாற்றத்திற்காக, ஒரு மனிதர் விரும்பியபடியே மிகச் சரியாக ஒவ்வொரு விஷயமும் நடைபெறுகையில் அம்மனிதர் ஒரு நாளைக் கொண்டவராக இருக்கின்றார். அவர் காலையில் எழும்போது, மாபெரும் உணர்வடைகின்றார். அவரது முயற்சிகளைப் பாராட்டுகின்ற அவரது முதலாளி, அவருக்கு ஊதிய உயர்வொன்றை அளிக்கின்றார். அவர் வீடு திரும்புகையில் அவரது பிள்ளைகள் அவரைக் கட்டிப்பிடித்துக் கொள்ளுகின்றனர். அவரது மனைவி தனது முத்தங்களால் அவரைத் திணறச் செய்து அவருக்குப் பிரியமான உணவைச் சமைக்கின்றாள். எதிர்பாராதவிதமாக ஒரு நண்பர் கடன் ஒன்றைத் திருப்பிச் செலுத்துவதற்காக வருகின்றார். அன்று மாலை அவர் படுக்கைக்குச் செல்லும்போது, அவர் புன்சிரிப்புடன் "என்ன ஒரு நாள்!" என்று நினைக்கின்றார். அவரது அயலகத்தவரின் நாள் இவ்வளவு நன்றாகச் செல்லுவதில்லை: அவர் ஒரு தலைவலியுடன் எழுந்திருக்கின்றார். அவர் முகச்சவரம் செய்கையில் தன்னையே காயப்

*படுத்திக் கொள்ளுகின்றார். அவர் வேலைக்குத் தாமதமாகச் செல்லுகின்றார், மற்றும் அவரை வேலைக்கு அமர்த்தியவர் அவரை நாள் முழுவதும் விமர்சித்துக் கொண்டிருக்கின்றார். அவர் வீடு திரும்புகின்றபோது, எரிச்சல் கொண்ட மனைவியால் [முணுமுணுப்புடன்] வரவேற்கப்படுகின்றார், பிள்ளைகள் அழுதுகொண்டிருக்கின்றன, செலவுகள் செலுத்தப்பட முடியாது இருக்கின்றன. கடைசி வைக்கோலாக, அவரது நாய் அவரைக் கடிக்கின்றது. அன்று இரவில் அவர் தலையணையில் தமது தலையைச் சாய்க்கும்போது, அவர் புலம்பிக்கொண்டு, "என்ன ஒரு நாள்!" என்று கூறுகின்றார்.[1]*

*நாம், இயேசுவின் வாழ்வில் மிகவும் வேலைமும்முரமான,[2] மிகவும் கடினமான, மற்றும் மிகவும் குறிப்பிடத்தக்கதான நாட்களில் ஒன்றைப் பற்றிப் படித்துக் கொண்டிருக்கின்றோம்: அவரது ஊழியத்தின் கடைசி வாரத்தில் செவ்வாய்க்கிழமை.[3] அது போதனையின் நாளாக,[4] கேள்விகளின் நாளாக, போராட்ட நாளாக, மற்றும் ஒரு புறக்கணித்தலின் நாளாக இருந்தது. அந்த நாளின் முடிவில் கிறிஸ்து, திருப்தியின் கொஞ்ச அளவுடன், "என்ன ஒரு நாள்!" என்று கூறியிருக்கக்கூடும். இதற்கு மறுபுறத்தில், சங்கடமுற்றிருந்த அவரது விரோதிகள் "என்ன ஒரு நாள்" என்று முணுமுணுத்திருக்க மட்டுமே முடிந்திருக்கும்.*

*நமது முந்திய பாடம், இந்த நாளைக் காய்ந்துபோன அத்திமரத்தின் வரலாற்றைக் கொண்டு நமக்கு அறிமுகப்படுத்தியிருந்தது. இந்தப் படிப்பு தொடங்குகையில், இயேசு - கடைசி முறையாக - தேவாலயத்தில் பஸ்கா பண்டிகைக்காகக் கூடியிருந்த மக்கள் கூட்டங்களுக்குப் போதித்தார் (மத். 21:23; மாற். 11:27; லூக். 20:1). இந்த எடுத்துரைப்பு, அவர் அந்த நாளில் போதித்த சத்தியங்கள் சிலவற்றை மையங்கொண்டுள்ளது.[5]*

## *அதிகாரத்துவத்தின் மீதான ஒரு பாடம்*
## *(மத். 21:23-27; மாற். 11:27-33; லூக். 20:1-8)*

*"அந்நாட்களில் ஒன்றில், அவர் தேவாலயத்திலே[6] ஜனங்களுக்கு உபதேசித்து, சுவிசேஷத்தைப்[7] பிரசங்கித்தபோது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்து" (லூக். 20:1). "பிரதான ஆசாரியர்," "வேதபாரகர்," மற்றும் "மூப்பர்" என்பவை சனதெரீன் சங்கத்தாரைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இது இயேசு மரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்த யூதத்துவ ஆலோசனைச் சங்கத்தின் பிரதிநிதிக்குழுவாக இருந்தது (யோவா. 11:47-53, 57).*

***கேள்வி***

*அவரிடத்தில் அவர்கள், "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டனர் (மத். 21:23; மாற். 11:27, 28; லூக். 20:2ஐக் காணவும்). "இவைகள்" என்பது தேவாலயத்தில் அவரது போதனையை உள்ளடக்கியிருக்கும், ஏனெனில் அவர் அலுவலகரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ரபீயாக*

*இருந்ததில்லை. அவர் முந்தின நாளில் தேவாலயத்தைச் சுத்திகரித்ததையும் அவர்கள் சிந்தையில் கொண்டிருக்கலாம், மற்றும் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற கூச்சல்மிகுந்த செயல்விளக்கத்தையும் அவர்கள் சிந்தையில் கொண்டிருக்கலாம்.*[8]

*அலுவலர்கள் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்பதற்கான உரிமை யுடன் இருந்தனர்; அவர்கள் தேவாலயம் தொடர்பான எல்லா விஷயங் களுக்கும் பொறுப்பானவர்களாய் இருந்தனர். மற்றும், இது ஒரு சட்டப் பூர்வமான கேள்வியாக இருந்தது; மதரீதியான கலந்துரையாடல்களில் அதிகாரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது முதல் விஷயமாக உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இவர்கள் சத்தியத்தைக் கண்டறிவதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. மாறாக, இயேசுவை "தாங்கள் முற்றிலும் கட்டுப்பாடு கொண்டுள்ள விஷயங்களில் அதிகாரத்துவமற்ற வகையில், தம்மைத்தாமே சுயமாக நியமித்துக் கொண்டு குறுக்கிடுபவர்" என்று கூட்டத்தாருக்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.*[9]

*கிறிஸ்துவின் அதிகாரத்துவம் மனிதர்களிடமிருந்து அல்ல, ஆனால் தேவனிடத்திலிருந்தே வந்திருந்தது (மத். 17:5; 28:18; எபி. 1:1, 2); இருப்பினும் அவரைக் கேள்வி கேட்டவர்கள் இதை அறிவதற்கு விரும்பாதிருந்தனர். மறுக்கமுடியாத ஏராளமான அற்புத அடையாளங்களின் மூலமாக, இயேசு தமது மேசியாத்துவச் சான்றாதாரங்களை மூன்று ஆண்டுகள் அளவாக முன்வைத்திருந்தார், ஆனால், அந்த நிரூபணங்களைக் காணாததுபோல் இருக்கத் தெரிந்து கொண்டார்கள். மற்றும், அவர் பிற ஆதாரங்களைக் கொடுத்தாலும் அவர்கள் நம்பி இணங்கமாட்டார்கள். இவையெல்லா வற்றையும் கர்த்தர் அறிந்திருந்தார், எனவே அவர்களின் கேள்விக்கு ஒரு கேள்வியாலேயே பதில் அளிப்பதென்று கர்த்தர் தீர்மானித்தார் - அந்தக் கேள்விக்கு அவர்கள் நேர்மையாகப் பதில் அளித்தால், அவர்கள் தங்கள் தொடக்கக் கேள்விக்குப் பதில் அளிப்பவர்களாய் இருப்பார்கள்.*

***பதிலுரை***

*அவர், "நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுவீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன். யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டா யிற்றோ? யாரால் உண்டாயிற்று என்று கேட்டார்" (மத். 21:24, 25அ). யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்று என்று அவர்கள் ஒப்புக்கொண்டால், யோவான் தாமே தேவனால் கட்டளையிடப் பட்டவராய் இருந்தார் - மற்றும் அவரது [யோவான் ஸ்நானனின்] போதனை உண்மையானதாயிருந்தது என்ற கருத்து தொடருவதாயிருக்கும். அந்த போதனையில், இயேசுவைக் குறித்து சாட்சியமும் உள்ளடங்கிற்று: "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!"; "... இவரே தேவனுடைய குமாரன்" (யோவா. 1:29, 34).*[10] *இவ்விதமாக, அவர்கள் யோவா[ன் ஸ்நான]னின் அதிகாரத்துவத்தை ஏற்றுக் கொண்டார்*

கள் என்றால், அவர்கள் இயேசுவின் அதிகாரத்துவத்தையும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

கிறிஸ்துவின் பதிலானது அலுவலர்கள் எதிர்பாராத வகையில் அவர்களைப் பிடித்தது. அவர்கள் ஒரு அவசர மாநாடு நடத்தினார்கள்.

> அவர்கள் தங்களுக்குள்ளே யோசனை பண்ணி: " 'தேவனால் உண்டாயிற்று' என்று சொல்வோமானால், 'பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லை' என்று கேட்பார். 'மனுஷரால் உண்டாயிற்று' என்று சொல்வோமானால், ஜனங்களெல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறபடியினால் நம்மைக் கல்லெறிவார்கள்" என்று சொல்லி ... (லூக். 20:5, 6).

அவர்கள் ஒரு இக்கட்டான நிலையில் பிடிக்கப்பட்டார்கள்: அவர்கள், யோவான் இயேசுவைப் பற்றிச் சரியாகவே கூறினார் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டியிருந்தது, அல்லது அவர்கள் தங்கள் பக்கமாக இழுக்க முயற்சி செய்துகொண்டிருந்த அந்தக் கூட்டத்தாரிடமிருந்து விலக்கப் படுதல் என்ற இடர்ப்பாட்டை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது. "உண்மை நிறைந்த பதில் என்ன?" என்று அவர்கள் விவாதிக்கவில்லை "சூழ்நிலைக்குத்தக்க பதில் என்ன?" என்பதிலேயே அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர்.

அவர்கள் சங்கடம் அடைந்த நிலையில் இயேசுவிடம் திரும்பி, "எங்களுக்குத் தெரியாது" என்று கூறினார்கள் (மத். 21:27அ). "பதில் கூற எங்களுக்கு விருப்பம் இல்லை" என்பதே மிகச் சரியான பதிலுரையாக இருந்திருக்கும், ஆனால் உண்மையை உரைத்தல் என்பது அவர்களின் பலமாக இருக்கவில்லை. இயேசு, "நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்" என்றார் (மத். 21:27ஆ). நீங்கள் நேர்மையான மனிதர்களுடன் கலந்து பழகுவதுபோல் நேர்மையற்ற மனிதர்களுடன் கலந்து பழக முடியாது என்று யாரோ ஒருவர் கவனித்துள்ளார்.

## குமாரத்துவம் மீதான ஒரு பாடம்
## *(மத். 21:28-32; மாற். 12:1)*

இயேசு தம்மை விமர்சித்தவர்களை, அப்போதைக்கு அமைதிப்படுத்தி யிருந்த நிலையில், "உவமைகளால் அவர்களுக்குச் [தலைவர்கள் மற்றும் கூட்டத்தினருக்கு] சொல்லத் தொடங்கினதாவது" (மாற். 12:1அ) விரைவான வரிசையில் மூன்று உவமைகள் பின்தொடர்ந்தன,[11] அவை ஒவ்வொன்றும் யூத அதிகாரவர்க்கத்தவர்களின் இருதயங்களை வெளிப் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. அவர்கள், அவரது அதிகாரத்துவத்தைப் பற்றிக் கேள்வி கேட்டிருந்தார்கள். அவர்கள் தேவனு டைய உடன்படிக்கையின் மக்களுக்குப் பிரதிநிதிகள் மற்றும் தலைவர்கள் என்ற வகையில், தங்கள் அதிகாரத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்தி னார்கள் என்று, இப்போது அவர் வெளிப்படுத்தினார்.

இந்தக் கதைகளை மாற்கு சுவிசேஷ விவரமானது, "உவமைகள்" என்று அழைக்கிறது (மாற். 12:1), ஆனால் இவைகள் ஒரு உவமையின் முறைப் படியான தர அளவையில் பொருந்தி வருவதில்லை. எடுத்துக்காட்டாக, சட்டப்படி உவமை என்பது ஒரே ஒரு கருத்தை ஏற்படுத்துகிறது; ஆனால் இந்தக் கதைகள் இயல்பில் அதிகம் உருவகத் தன்மை கொண்டுள்ளன. ஒரு சில இணைவுகள் தரவழைக்கப்படக் கூடும், மற்றும் ஒவ்வொரு எடுத்துரைப்பில் இருந்தும் பல நடைமுறைப் பயன்பாடுகள் ஏற்படுத்தப் படுகின்றன.[12] இருப்பினும், இந்த ஒவ்வொரு கதையிலும் உள்ள ஒவ்வொரு விவரமும் "ஏதோ ஒன்றை அர்த்தப்படுத்துவதாகக்" கருத்து ஏற்படுத்த முயற்சி செய்யாதிருக்க நாம் எச்சரிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி**

கிறிஸ்து, "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?" என்று தொடங்கினார் (மத். 21:28அ). அவர் விரைவில் தாம் கேள்வி கேட்கப் போவதாகக் குறிப்பிட்டார், எனவே அவர்கள் [அவர் கூறுவதை] ஜாக்கிரதையாகக் கேட்பது அவசியமாயிருந்தது. அவர் எடுத்துரைத்த கதை எளிமையானதாக இருந்தது:

> ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: "மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய்" என்றான். அதற்கு அவன்: "மாட்டேன்" என்றான்; ஆகிலும் பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: "போகிறேன் ஐயா," என்று சொல்லியும் போகவில்லை (மத். 21:28ஆ-30).[13]

இயேசு தமது விரோதிகளின்[14] பக்கம் திரும்பி, "இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன்?" என்று கேட்டார் (மத். 21:31அ).

**பதிலுரை**

ஒருவேளை அவர்கள் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கலாம்; இங்கு அவர்களால் பதில் தரக்கூடிய ஒரு கேள்வி இருந்தது. அவர்கள், "மூத்தவன்தான்" என்று பதில் அளித்தனர் (மத். 21:31ஆ) - இவர்கள் தங்கள் பதிலில் தங்களையே குற்றப்படுத்திக்கொண்டதை உணர்ந்தறியாது இருந்தனர்.

இந்த உவமையில், "மாட்டேன்" என்று மூத்தமகன் கூறினான், ஆனால் பின்பு அவன் தனது தந்தைக்குக் கீழ்ப்படிந்தான், இவன் பொதுஜனங்களை, சிறப்பாக "ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள்" என்று பரிசேயர்கள் வகைப்படுத்தியிருந்த (மத். 9:11) மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினான். கடந்த நாட்களில், இந்தப் "பாவிகள்" தேவனுடைய வழியில் நடக்க மறுத்திருந்தனர்; ஆனால் அவர்கள், யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் பிரசங்கித்தலைக் கேட்டபோது, மனந்திரும்பினார்கள். இதற்கு மறுபுறத்தில், "போகிறேன் ஐயா" என்று இரண்டாவது மகன் கூறினான்,

ஆனால் பின்பு இவன் தனது தந்தைக்குக் கீழ்ப்படியாதிருந்தான். இவன் தேவனிடத்தில் தாங்கள் ஏற்படுத்தியிருந்த உறுதிப்பாடுகளை கடைப் பிடிக்காதிருந்த மதத் தலைவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினான்.

இயேசு பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார்:

> ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே[15] தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை;[16] ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்பட வில்லை என்றார் (மத். 21:31இ, 32).

இந்த உவமைமீதான இயேசுவின் அடிப்படைப் பயன்பாட்டுடன் கூடுதலாக - அவரது விரோதிகளின் மனப்பாங்கை வெளியாக்குவதற்காக - இதிலிருந்த பல நடைமுறைப் பாடங்கள் தரவழைக்கப்படக் கூடும். எடுத்துக்காட்டாக, இது ‘‘மனந்திரும்புதல்’’ என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பற்றித் தனிச்சிறந்த விவரிப்பாக உள்ளது: வசனம் 29, 32 ஆகியவற்றில் ‘‘மனஸ்தாபப்பட்டு’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைகள் பெரும்பாலும் ‘‘மனந்திரும்புதல்’’ என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. “மனந்திரும்புதல்” என்பதற்கான கிரேக்க வார்த்தை “மனதில் ஒரு மாற்றம்” என்று மொழிபெயர்க்கப்படக்கூடும் என்று நாம் குறிப்பிட்டுள்ளோம். வசனம் 29, NIVயில் பின்வருமாறு காணப்படுகிறது: “ ‘நான் மாட்டேன்’ என்று [மூத்த மகன்] பதில் அளித்தான், ஆனால் பின்பு அவன் *தனது மனதை மாற்றிக்கொண்டு* போனான்.” மக்கள் மனந்திரும்பும்போது, அவர்கள் பாவத்தைப் பற்றித் தங்கள் மனதை மாற்றிக் கொள்கின்றனர். அவர்கள் தேவனுக்கு ‘‘மாட்டேன்’’ என்று சொல்வதை நிறுத்திவிட்டு அவரது சித்தத்தைச் செய்யத் தொடங்கு கின்றனர். இரண்டு மகன்களைப் பற்றிய இந்த உவமையானது, இந்த சத்தியத்திற்கு ஒரு எளியதான ஆனால் ஆழ்ந்தறிவுள்ள விவரிப்பாக உள்ளது.

உண்மையான குமாரத்துவம் என்பது எதை உள்ளடக்கியுள்ளது என்பது இந்த உவமையிலிருந்து வருகிற மிக முக்கியமான பாடமாக இருக்கலாம்: பிதாவுக்கு (“செய்கிறேன், ஐயா” என்று கூறுவதன்மூலம்) உதடுகளினால் ஆராதனை செய்தல் என்பது மட்டும் போதாது; பிதாவானவர் நாம் செய்யும்படி கூறுபவற்றை நாம் *செய்ய வேண்டும்* (மத். 7:21; லூக். 6:46ஐக் காணவும்). தேவன் தமது அறுப்புக்கு இன்னமும் வேலையாட்களை அழைத்துக் கொண்டிருக்கின்றார் (மத். 9:36ஐக் காணவும்). நாம் வீட்டை விட்டு வெளியேறி திராட்சத்தோட்டத்தில் இருப்பதற்கு மனந்திரும்புதல் தேவையானதாக இருந்தால், நாம் மனந்திரும்புவோம்.

# கணக்கு ஒப்புவித்தல் மீதான ஒரு பாடம் (மத். 21:33-46; மாற். 12:1-12; லூக். 20:9-19)

*மதத் தலைவர்கள் சுயவளமையையும் சுயமகிமையையும் அடைவதற்குத் தங்கள் அதிகாரத்துவப் பதவி நிலைகளை எவ்வாறு பயன்படுத்தியிருந்தார்கள் என்பதைக் காண்பிக்க இயேசு அடுத்ததாக ஒரு உவமையைக் கூறினார். அவர்கள் அவரைக் கொல்வதற்கு விரும்பியதற்கான அவர்களின் கொடூரமான நோக்கங்களையும்கூட இந்த உவமை வெளிப்படுத்திற்று.*

**கேள்வி**

*"பின்பு அவர் ஜனங்களுக்குச்*[17] *சொல்லத் தொடங்கின உவமையாவது" (லூக். 20:9அ): "வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி கோபுரத்தையும் கட்டினான்" (மத். 21:33அ). இந்த உவமை, அந்த நாட்களில் இருந்த பொதுவான நடைமுறைகளைப் பிரதிபலிக்கிறது: திராட்சத் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காக அதைச் சுற்றிலும் ஒரு மதில் (அல்லது வேலி) இடப்பட்டது. "திராட்ச ரசம் பிழியும் ஆலை" என்பது, மாறுபட்ட மட்டங்களில் பறிக்கப்பட்ட, தொட்டி வடிவத்திலான இரண்டு பெரிய துளைகளைக் கொண்டிருந்தது. உயரத்தில் இருந்த துளையில் திராட்சப் பழங்கள் மிதிக்கப்படுவதற்கு வைக்கப்பட்டன. திராட்ச ரசம் தாழ்வான துளையின் வழியே வெளியேறி, அது அமிழ்த்தி வெளியேற்றப்படும். கோபுரம் என்பது, கள்வர்களிடமிருந்து திராட்சத் தோட்டத்தைப் பாதுகாப்பதற்காகக் காவலர்கள் அமர்த்தப்பட்ட ஒரு நடைமேடையாக இருந்தது. இந்த விவரங்கள் எவ்விதமான "ஆழ்ந்த அர்த்தத்தையும்" கொண்டிருப்பதில்லை; இவைகள் "வெறும் உவமை அணிகளாக" உள்ளன.*[18]

*பின்பு அந்த வீட்டெஜமான், "தோட்டக்காரருக்கு அதை[திராட்சத் தோட்டத்தை]க் குத்தகையாக விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்" (மத். 21:33ஆ). வீட்டில் இராத வீட்டெஜமானர்கள் தங்கள் நிலங்களைப் பயிரிட்டுப் பண்படுத்தக்கூடிய விவசாயிகளிடத்தில் விட்டுச் செல்லுதல் என்பது பொதுவான நடைமுறையாகவே இருந்தது. இந்த வீட்டெஜமான் தமது கூலிக்காரர்களிடத்தில் பயிரில் பங்கு என்ற ஏற்பாட்டைக் கொண்டிருந்தார்: அவர்கள் ஒப்புக்கொண்ட சதவிகித அளவு உற்பத்திப் பொருளிலிருந்து தந்து விடவேண்டும் (மாற். 12:2). குத்தகைக்காரர்கள் என்பவர்கள் யூத இனத்தின் தலைவர்களுக்கு உருவகமாக இருந்தனர். இந்த மனிதர்கள் தேவனுடைய சுதந்திரத்தை எவ்வாறு நடத்தினர் (அல்லது தவறாக நடத்தினர்) என்பது பற்றிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருந்தனர். லூக்கா சுவிசேஷ விவரத்தின்படி, இந்த வீட்டெஜமான் "நெடுநாளாகப் புறதேசத்துக்குப் போயிருந்தான்" (லூக். 20:9). நியமிக்கப்பட்டிருந்த தலைவர்கள் தேவனுடைய திராட்சத் தோட்டமான இஸ்ரவேலுக்குப்*[19] *பல நூற்றாண்டுகள் காலமாகப் பொறுப்பாளர்களாய் இருந்தனர்.*

“கனிகாலம் சமீபித்தபோது” (மத். 21:34அ), வீட்டெஜமான் …

> தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டுவரும்படி, … அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி,[20] அவமானப் படுத்தி அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் வேறொருவனை அனுப்பி னான்; அவனை அவர்கள் கொலை செய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்று போட்டார்கள் (மாற். 12:2-5).

வீட்டெஜமானனின் ஊழியக்காரர்களுக்குச் செய்யப்பட்ட இந்தக் கொடுமையான செயலானது, தேவனுடைய தீர்க்கதரிசிகளுக்குச் செய்யப் பட்ட தீமையான நடத்தையைப் பிரதிபலித்தன. அவர்கள் யூத இனத் தாரால் பொதுவாகவும் யூதத்தலைவர்களால் குறிப்பாகவும் துன்புறத்தப் பட்டிருந்தனர் (நெகே. 9:26; எரே. 7:25, 26; மத். 23:34; அப். 7:52; எபி. 11:36-38).

மனம் கலங்கிய வீட்டெஜமானர், “நான் என்ன செய்யலாம்?” என்றான் (லூக். 20:13அ). “அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான்” (மாற். 12:6அ). அவர்கள் *நிச்சயமாக* இவரது மகனை மதிப்பார்கள் (மாற். 12:6ஆ); அவர்கள் மதிக்கமாட்டார்கள் என்பது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற் பட்டிருந்தது. இவ்விதமாக, “அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான்'' (மாற். 12:6இ). ''பிரியமான ஒரே குமாரன்'' என்ற சொற்றொடர், இந்தக் கதையில் வரும் இந்தப் பாத்திரத்தைச் சுலபமாக அடையாளப்படுத்தச் செய்கிறது; இந்தக் குமாரன் என்பவர் இயேசுவாகவே இருந்தார் (மத். 17:5; லூக். 3:22).

“தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: ‘இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள்’ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்[டனர்]” (மத். 21:38). இந்தக் கொடுமையான தர்க்கம் நமக்கு வினோதமாகத் தாக்குவதாயிருக்கலாம்; ஆனால் கல்வியாளர்கள் சிலரின் கருத்துப்படி, “சுதந்தரவாளி ஒருவரால் உரிமைகோரப்படாத ஒரு நிலம் ‘உரிமையாளரற்றது’ என்று அறிவிக்கப் படும் மற்றும் அப்படிப்பட்ட நிலத்தை எவரொருவரும் உரிமைகோர முடியும் என்று யூதர்களின் சட்டம் இடம் அளித்திருந்தது.”[21] குத்தகைக் காரர்கள் அதைத் தங்கள் நிலம் என்று நினைக்குமளவுக்கு நீண்ட காலமாக அந்த நிலத்தைத் தங்கள் வசமாய் வைத்திருந்தனர். அது போலவே, யூத உயரதிகார வர்க்கத்தினரும், தங்களைத் தேவனுடைய சித்தத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேவனுடைய ஊழியக்காரர்களாக மட்டும் நினைத்திருப்பதை விட்டொழித்தனர். மாறாக அவர்கள், இஸ்ரவேல் இனத்தைத் தங்களுக்குரிய தனிப்பட்ட உடைமையென்று கருதினார்கள்.

இந்த உவமையில், குத்தகைக்காரர்கள் தங்கள் கொலைத் திட்டத்தைச்

செயல்படுத்தினார்கள்: "அவனைப் பிடித்துத் திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்" (மத். 21:39). ஒரு சில நாட்களுக் குள்ளாகவே, கிறிஸ்து எருசலேம் நகருக்குப் புறம்பே இழுத்துச் செல்லப் பட்டு, சிலுவையில் அறையப்படுவார் (எபி. 13:12ஐக் காணவும்).

இயேசு இன்னொரு கேள்வியை முன்மொழியத் தயாரானார். அவர் தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், "அப்படியிருக்க, திராட்சத் தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான்?" என்று கேட்டார் (மத். 21:40).

**பதில்**

இங்கு பதில் அளிக்க மிகவும் எளியதான கேள்வியொன்று இருந்தது.[22] அவர்கள், "அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்ற காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான்" என்றார்கள் (மத். 21:41).

பின்பு கிறிஸ்து, அவர்களின் பதிலுரையில் மறைமுகமாய் இருந்த திகைக்க வைக்கும் சத்தியத்தை வெளிப்படுத்தினார்: "ஆகையால், தேவனு டைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்[23] தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத். 21:43). வசனம் 41ல் உள்ள "வேறே தோட்டக்காரர்" என்பதும் வசனம் 43ல் உள்ள "ஜனங்கள்" என்பதும் புறஜாதியாரைக் குறித்தது. யூதர்கள் சுவிசேஷத்தைப் புறக் கணிக்கும்போது, தேவனுடைய செய்தியாளர்கள் புறஜாதியாரிடமாய்த் திரும்புவார்கள் (அப். 13:46; 18:6ஐக் காணவும்). இயேசுவின் உரையைக் கேட்டவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை முற்றிலுமாகப் புரிந்து கொள்ளாதிருந்தனர், ஆனால் தங்கள் நாட்டிற்கு/இனத்திற்கு ஒரு துன்பகரமான எதிர்காலம் முன்னுரைக்கப்பட்டது என்பதை அறியும் அளவுக்கு அவர்கள் புரிந்துகொண்டனர். அவர்கள், "அப்படியாகாதிருப்ப தாக" என்று கதறினார்கள் (லூக். 20:16).[24]

கவலைக்குரிய வகையில், இது நடந்தேறும் - ஏனெனில், தேவனுடைய "தோட்டக்காரர்கள்" (யூதத் தலைவர்கள்) அவருடைய குமாரனைக் கொலை செய்யத் தீர்மானித்திருந்தனர். இது நடைபெறும் என்பதற்கு நிரூபணமாக கிறிஸ்து, மேசியாவைப் பற்றி நன்கு பழக்கப்பட்ட சங்கீதம் 118ல் இருந்து மேற்கோள் காண்பித்தார்: "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்ற தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா?" (மத். 21:42). யூதத்துவ போதகர்களும் தலைவர்களும், மேசியா ஒரு இராஜரீகமான இராணுவத் தலைவராக இருப்பார் என்ற முன் அனுமானக் கருத்தைக் கொண்டிருந்த னர். இயேசு வந்தபோது, அவர் "ஒரு தகுதிவாய்ந்த மேசியா" என்ற அவர் களின் உருவகத்திற்குப் பொருந்திவராதிருந்தபடியால் அவரை அவர்கள் புறக்கணித்தனர். வெறுமையான தலையைக் கொண்ட கட்டுமானப் பணியாளர்கள் விலக்கி வைத்த அந்தக் கல்லின்மீதே கட்டிடத்தின்

*(ராஜ்யத்தின்) எஞ்சிய பகுதி கட்டப்பட வேண்டியதாக இருந்தது.*[25]

*"மூலைக்குத் தலைக்கல்லை" புறக்கணிப்பவர்களுக்கு என்ன நடக்கும்? கிறிஸ்து, "இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்" என்று கூறினார் (மத். 21:44). "ஒரு கல்லின்மீது மோதுகிற [மண்]பானை நொறுங்குவதுபோல், கீழே விழுகிற ஒரு கல்லின் கீழ் உள்ளவன் நசுக்கப்படுவதுபோல், மேசியா வாகிய இயேசுவைப் புறக்கணிப்பவர்களும் அழிந்துபோவார்கள்."*[26]

*இயேசுவின் நண்பர்கள் அவரது உவமைகளை எப்போதுமே புரிந்துகொண்டிருந்தது இல்லை (லூக். 8:9); ஆனால் இந்த வேளையில், அவரது விரோதிகளும்கூட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதில் சிரமம் எதையும் கொண்டிருக்கவில்லை: "பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார் என்று அறிந்து" (மத். 21:45). அவர்கள் அநேகமாக எல்லா விவரங்களையும் புரிந்துகொண்டிருக்க மாட்டார்கள், ஆனால் குறைந்தபட்சம், அந்தக் கதைகள் தங்களைச் சுட்டிக்காண்பித்தன என்றும் பாராட்டுரையை விடக் குறைவானவைகளாக இருந்தன என்றும் அவர்கள் அறிந்தனர். அவர்களின் வெறுப்புணர்வு வலுப்பெற்றது, அவர்கள் "அந்நேரத்திலே அவரைப் பிடிக்க வகை தேடி[னார்கள்]" (லூக். 20:19ஆ). இருப்பினும், மீண்டும் ஒருமுறை அவர்கள் "அவரைத் தீர்க்கதரிசியென்று எண்ணின" மக்களிடத்தில்*[27] *(மத். 21:46), தங்களுக்கிருந்த பயத்தினால் பின்வாங்கினார்கள்.*

## *மதித்தல் மற்றும் ஆயத்தப்படுத்துதல் மீதான பாடங்கள் (மத். 22:1-14)*

*பின்பு இயேசு தமது மூன்றாவது உவமையை எடுத்துரைத்தார்: ராஜாவின் மகனுடைய திருமண விருந்து. இது பல வாரங்களுக்கு முன்னதாகக் கிறிஸ்து கூறிய மாபெரும் விருந்து என்ற உவமையைப் போன்றதாகவே உள்ளது (லூக். 14:16-24), ஆனால் வித்தியாசங்களும் உள்ளன. முந்திய உவமையானது ராஜ்யத்தில் பங்கேற்கும்படியான தேவனுடைய அழைப்பைப் புறக்கணிப்பதில் உள்ள மடமையைப் போதிப்பதற்குக் கொடுக்கப்பட்டது.*[28] *இந்த உவமையானது, யூத உயரதிகார வர்க்கத்தினரின் பொல்லாத தன்மையையும் அவர்களின் செயல்களுக்கான திண்டாட்டமான விளைவுகளையும் வெளிப்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்த உவமையானது ஒரு இரட்டை உவமை என்ற வகையில் வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது: இதன் முதல் பகுதியானது இயேசுவின் பகைவர்களை நோக்கித் திருப்பப்பட்டது, ஆனால் இரண்டாவது பகுதியானது இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு பாடத்தைக் கொண்டிருந்தது.*

### *மதிப்பின்மீதான ஒரு பாடம்*

*இந்த உவமையின் முதல் பாகத்தில், "தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த ஒரு ராஜா[வை]"ப் பற்றி எடுத்துரைத்தது (மத். 22:2). இந்த ராஜா*

தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்தினார், இயேசுவே அவரது மகனாக இருக்கின்றார், மற்றும் திருமண விருந்து என்பது மேசியாத்துவ ராஜ்யத்தில் உள்ள ஏராளமான ஆசீர்வாதங்களைக் குறித்து நிற்கிறது.[29]

விருந்து தயாரானபோது, அழைக்கப்பட்ட விருந்தினர்களை வரும்படி கூறுவதற்கு ராஜா தமது வேலைக்காரரை அனுப்பினார் (வ. 3, 4). அழைக்கப்பட்ட விருந்தினர்கள் "மத ரீதியான" யூதர்களைப் பொதுவாக வும் மற்றும் யூதத்துவத் தலைவர்களைக் குறிப்பாகவும் பிரதிநிதித்துவப் படுத்தினர். விருந்தினர்களில் சிலர் வேண்டுகோள்களைப் புறக்கணிக்கை யில், மற்றவர்கள் அந்த வேலைக்காரர்களைத் தவறாக நடத்திக் கொலை செய்தனர் (வ. 3, 5, 6). கொடிய குத்தகைக்காரர்களின் உவமையில் போன்றே, இங்கும் யூதத்தலைவர்கள் தேவனுடைய செய்தியாளர்களான தீர்க்கதரிசிகளை எவ்வாறு நடத்தியிருந்தனர் என்பது கூறப்பட்டது.

இந்த பதில்செயலினால், "ராஜா கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலை பாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்" (வ. 7). இந்த வார்த்தைகளில் இயேசு, கி.பி. 70ல் நடை பெறவிருந்த எருசலேமின் அழிவை முன்னுரைத்தார் என்று விளக்கவுரை யாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்ளுகின்றனர்.[30] அந்தத் தலைப்பு, இரு அதிகாரங்களுக்குப் பின்பு, மத்தேயு 24ல் விரித்துரைக்கப்படும். கல்வியாளர் கள் சரியாகவே உள்ளனர் என்று யூகித்துக்கொண்ட நிலையில், எருசலேம் நகரைக் கிறிஸ்து, "எனது பட்டணம்" என்றோ அல்லது "நமது பட்டணம்" என்றோ குறிப்பிடுவதற்குப் பதிலாக "அவர்கள் பட்டணம்" என்று குறிப்பிட்டதைக் கவனியுங்கள். ஒரு இனம் என்ற வகையில் யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்தபோது (யோவா. 1:11), அவர்கள் தேவனுடைய மக்களாக இல்லாது ஒழிந்தனர் (ரோமர் 2:28, 29; 10:12; கலா. 3:28; வெளி. 2:9; 3:9) மற்றும் எருசலேம் பட்டணம் "தேவனுடைய பட்டணமாக" இல்லாது ஒழிந்தது.

பின்பு ராஜா, தனது ஊழியக்காரரை நோக்கி, வழிச்சந்துகளில் போய் காணப்படுகிற யாவரையும் விருந்திற்கு அழைத்துக் கொண்டு வரும்படி அறிவுறுத்தினார் (மத். 22:8, 9). செய்தியாளர்கள், "வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது" (வ. 10). "நல்லார் பொல்லார்" என்பது "வரிவசூலிப்பவர்கள் மற்றும் பாவிகள்" (மத். 9:11), அவருடைய உபதேசத்தை "விருப்பத்தோடே கேட்டவர்கள்" ஆகியோரையும் (மாற். 12:37), அநேகமாகப் புறஜாதிகளையும் (மத். 21:43) உள்ளடக்கிற்று. உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த யூதர்கள் இயேசுவைப் புறக்கணித்ததால் அவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள், அதே வேளையில் அவரை ஏற்றுக்கொண்ட "சாதாரண" மக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள் என்பதை இயேசு மீண்டும் ஒருமுறை கருத்தாகக் குறிப்பிட்டார்.

### ஆயத்தப்படுத்துதலில் ஒரு பாடம்

உவமையின் இரண்டாம் பாகத்தில், விருந்து மண்டபத்திற்கு ராஜா

வந்தபோது, தகுதியான வகையில் உடை அணிந்திராத ஒரு மனிதனை அவர் கண்டுபிடித்தார் (வ. 11). அவர் அந்த மனிதனைக் கடிந்துரைத்து, விருந்துக் கொண்டாட்டத்தில் இருந்த அவனை பலவந்தமாக வெளியேற்றச் செய்தார் (வ. 12, 13). கதையின் இந்தப் பகுதியினால் பலர் திகைக்கின்றனர். ஒரு மனிதன் "நல்ல உடையணிந்திருக்கவில்லை என்பதற்காக மட்டும்" அவனை ஆக்கினைக்குட்படுத்தியது என்பது நியாயமற்றதாகக் காணப் படுகிறது என்று சிலர் மறுப்புரை தெரிவித்துள்ளனர். F. F. புரூஸ் அவர்கள் தமது, *The Hard Sayings of Jesus* என்ற புத்தகத்தில் மத்தேயு 22:11-14ஐ உள்ளடக்கினார்.[31] எல்லா சூழ்நிலைகளையும் நாம் அறிவதில்லை. ஆனால் "தக்க வகையில் உடை அணியாதிருந்த அம்மனிதன் தக்க வகையில் உடை அணிந்து வந்திருக்க *முடியும்* என்பது இவ்விடத்தில் மறைவான கருத்தாக உள்ளது. இவன் தனது தவறுடன் எதிர்கொள்ளப்பட்டபோது, சாக்குப் போக்கு எதுவும் கொண்டிருந்ததில்லை; இவன் 'பேசாமலிருந்தான்' " என்று புரூஸ் அவர்கள் விளக்கப்படுத்தினார்கள்.[32]

நமது நிபந்தனைகளின்படியல்ல ஆனால், தேவனுடைய நிபந்தனை களின்படியே அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது இயேசுவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்த யாவருக்கும் - அப்பொழுதும் இப்பொழுதும் - பாடமாக உள்ளது. கிறிஸ்து, "அந்தப் படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர் களோ சிலர்" என்று கூறிமுடித்தார் (வ. 14). விருந்துக்கு அழைக்கப் பட்டிருத்தல் என்பதற்கும் விருந்தை உண்மையிலேயே மகிழ்வுடன் அனு பவித்தல் என்பதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதன்மூலம் விருந்திற்கு ஆயத்தப்பட வேண்டும் (எபி. 5:9; 2 தீமோ. 2:21ஐக் காணவும்).

## கடமைகள் மீதான ஒரு பாடம்
## (மத். 22:15-22; மாற். 12:13-17; லூக். 20:20-26)

இயேசுவின் மூன்று உவமைகள், அதிகாரிகளின் குணங்களை வெளிப்படுத்தி, அவரை அழிப்பதற்கு அவர்கள், முன்பு எப்போதைக் காட்டிலும் அதிகமாகத் தீர்மானமாக இருக்கும்படி செய்தன. இப்போது நாம், அந்த நாளின் வாக்குவாதத்தினுடைய அடுத்த படிநிலைக்குக் கடந்து செல்லுகின்றோம், இது அவரது விரோதிகளால் - அவரை அகப்படுத்துவதற் கென்று வடிவமைக்கப்பட்ட கேள்விகளையுடைய - ஒரு கேள்விகளின் வரிசைத்தொடராக அவரிடத்தில் கேட்கப்பட்டது.

**கேள்வி**

முதலாவது கேள்வி பரிசேயர்களால் தொடங்கப்பட்டது. மத்தேயு சுவிசேஷ விவரமானது, "அப்பொழுது பரிசேயர் போய், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனைபண்ணி" என்று கூறுகிறது (மத். 22:15; மாற். 12:13). லூக்கா சுவிசேஷ விவரத்தின்படி, "அவர்கள் சமயம் பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுக்கும்

படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ளவர்களென்று காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்" (லூக். 20:20).[33]

பரிசேயர்கள், தங்கள் திட்டத்தின் ஒரு பகுதியான "தங்கள் சீஷரை ... அவரிடத்தில் அனுப்பினார்கள்" (மத். 22:16அ). இந்த "சீஷர்கள், அவர்களின் ஆர்வமிக்க மாணவர்களின்[34] குழுவாக இருந்திருக்க"லாம், இவர்கள் தங்கள் ஆசிரியர்களால் ஜாக்கிரதையாக ஒத்திகை பார்க்கப்பட்டிருந்த இளம் மனிதர்களாக[35] இருந்தனர்.

வசனப்பகுதியில் இத்துடன் இணைந்துள்ள வார்த்தைகள் திகைப்புக்குரியவைகளாக வருகின்றன: "ஏரோதியரையும்" (மத்.22:16அ). ஆட்சி செய்வதற்கு ஏரோது உரிமைகொண்டிருந்ததாக ஆதரித்த - இதன் மூலமாக, ஏரோதின் அதிகாரத்திற்கு ஆதாரமூலமாக இருந்த ரோமர்களை ஆதரித்த - ஏரோதியரைப் பரிசேயர்கள் வெறுத்தனர்.[36] இருப்பினும், பரிசேயர்கள் இயேசுவை இன்னும் அதிகமாக வெறுத்தனர். கிறிஸ்துவை ஒழியச் செய்வதற்கு அவர்கள் யாருடன் வேண்டுமென்றாலும் ஒத்துழைக்க மனவிருப்பத்துடனிருந்தனர்.[37] இந்த சந்தர்ப்பத்தில் பரிசேயர்களுக்கும் ஏரோதியர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த உடன்படிக்கைக்கான காரணம் இந்த வரலாற்றின் பிற்பகுதியில் தெளிவாக்கப்படும்.

இளமை நிறைந்த அந்தப் பிரதிநிதிகள் இயேசுவிடம் வந்துசேர்ந்த போது, அவர்கள் முகஸ்துதியுடன் தொடங்கினார்கள்,[38] அவ்வாறு செய்தால், கிறிஸ்து சற்றே எச்சரிக்கை தவறுவார் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள்: "போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகத்தாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லை யென்று அறிந்திருக்கிறோம்" (மத். 22:16இ). பின்பு அவர்கள், "ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது?" (மத். 22:17அ) என்று, முன்பு கிறிஸ்துவால் பயன்படுத்தப்பட்ட வார்த்தையை (மத். 21:28அ) எதிரொலித்தனர். அவரைப் பதில் அளிக்க வற்புறுத்தும்படிக்கு ஒவ்வொரு சொல்விளக்கமும் கணக்கிடப்பட்டிருந்தது.

அவர்கள் தங்கள் பொறியில் பிடிக்கத் தயாராக இருந்தனர். அவர்கள், "இராயனுக்கு[39] வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ?" என்று கேட்டார்கள் (மத். 22:17ஆ). ஒவ்வொரு ஆண்டிலும் யூதர்கள், ரோமருக்குத் தங்கள் கீழ்ப்படிதலை ஒப்புக்கொள்வதற்கென்று பெருந்தொகையொன்றைச் செலுத்த வேண்டியிருந்தது. யூதமக்கள் தங்கள்மீது விதிக்கப்பட்ட வெளிநாட்டு வரியை வெறுத்தனர்,[40] ஆனால் "poll-tax" என்ற வரியைப் பொறுத்தமட்டில் அவர்கள் விசேஷித்த வெறுப்புணர்வைக் கொண்டிருந்தனர். "Poll" என்ற ஆங்கில வார்த்தை "தலை" என்று அர்த்தப்படுகிற பழைய ஆங்கில வார்த்தையிலிருந்து வருகிறது. இது தலைவரியாக இருந்தது - அதாவது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட வரியாக இருந்தது.[41] "14-65 வயதிலிருந்த ஒவ்வொரு நபருக்கும் ஒரு தினேரியம்" என்பதே நியமிக்கப்பட்ட வரியாக இருந்தது.[42]

முன்னதாக, ஆலோசனைச் சங்க உறுப்பினர்களை இக்கட்டான நிலையில் அகப்படுத்திய கேள்வியொன்றை இயேசு அவர்களிடத்தில் கேட்டிருந்தார். பரிசேயர்களும் இதே அணுகுமுறையைப் பயன்படுத்த முடிவுசெய்தனர். ஆயினும் அவர்கள், வரிசெலுத்துதல் பற்றிய கேள்விக்குக் கிறிஸ்து பதில் அளித்தால், அவர் சிக்கலில் அகப்படுவார் என்று நினைத்தனர். அவர், "ஆம், வரிசெலுத்துங்கள்" என்று கூறினால், அவர் மக்களை அடக்கியாளும் ரோமர்களுக்கு ஆதரவாக இருந்தார் என்று அவர்மீது கண்டனம் கூறமுடியும். அவர், ''கூடாது'' என்று பதில் அளித்தால், பரிசேயர்களுடன் வந்திருந்த ஏரோதியர்கள், அவரைப் பற்றி, மக்களைக் கவிழ்த்துப் போடுபவர் என்று ரோம அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியும்.[43] ஒரு பதிலானது அவரை, மக்கள் அவருக்கு ஆதரவாயிராத நிலையில் வைக்கும்; மற்ற பதில் அவரை, குடிமை அதிகாரிகளுக்கு விசுவாசமற்றவர் என்று அடையாளப்படுத்தும்.

**பதில்**

என்னிடத்தில் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் நான், வாய்குழறிப்போய், பின்பு ஆலோசனைச் சங்க உறுப்பினர்களிடத்தில் பின்வருமாறு பதில் அளித்திருப்பேன்: "எனக்குத் தெரியாது" (மத். 21:27ஐக் காணவும்). இயேசு அவ்வளவு சுலபமாக அச்சுறுத்தப்படுபவராக இருந்ததில்லை. அவர், "அவர்கள் துர்க்குணத்தை அறிந்து: 'மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?'" என்று கேட்டார் (மத். 22:18).

கர்த்தர் ஒரு பொருளறி பாடத்தைப் பயன்படுத்தத் தீர்மானித்தார். அந்த இளைஞர்களிடத்தில் அவர் "வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள்" என்று கூறினார் (மத். 22:19அ). அவர்கள் தங்கள் கேள்விக்கு அவரது பதிலால், அநேகமாகத் திகைப்படைந்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் ஒரு தினேரியத்தை[44] - இது வரிசெலுத்துவதற்குப் பயன்பட்ட ரோம நாணயமாக இருந்தது - அவரிடத்தில் கொண்டு வந்தனர் (மத். 22:19ஆ).

கிறிஸ்து அந்த நாணயத்தைப் பிடித்து அல்லது சுட்டிக்காண்பித்து, "இந்த சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது?" என்று கேட்டார் (மத். 22:20). தினேரியம் என்பது மிகச் சாதாரணமாகப் புழக்கத்தில் இருந்த ரோம நாணயமாகும்.[45] அந்த நாணயத்தில் ஒரு ''சுரூபம்'' முத்திரையிடப் பட்டிருந்தது: அது பேரரசரான திபேரியுவின் சித்திரமாக இருந்தது. அதில், பின்வருமாறு ஒரு "மேலெழுத்தும்" இருந்தது:

TICAESARDIVIAVGFAVGVSTVS

இது தி(பேரியு) இராயன், "தெய்வீகத்துவ அகுஸ்துவின் குமாரனாகிய திபேரியு அகுஸ்து இராயன்" என்று அர்த்தப்படும். *Ti(berius) Caesar, Divi Aug(usti) f(ilius) Augustus* என்பதன் சுருக்கமான பெயர் வடிவமாக இருந்தது.[46] ஆகையால் அவர்கள், "இராயனுடையது" என்றார்கள் (மத். 22:21அ).

பின்பு இயேசுவின் பொது நெறியான, மேற்கோள் வார்த்தைகள்

வந்தன: "... இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" (மத். 22:21ஆ). அந்த நாணயமானது இராயனால் வெளியிடப்பட்டிருந்தது; அது இராயனுடையதாக இருந்தது.[47] உண்மையில் கிறிஸ்து, "இராயனுடைய உடைமையை அவருக்குத் திருப்பிச் செலுத்துவதில் தவறில்லை" என்று கூறினார். இதற்கு மறுபுறத்தில், சில விஷயங்கள் - எடுத்துக்காட்டாக, ஆராதிக்கப்பட வேண்டிய உரிமை போன்றவை - முற்றிலும் தேவனுடையவைகளாக இருந்தன (மற்றும் இருக்கின்றன).[48] இவைகள் தேவனுக்கு மாத்திரம் அளிக்கப்பட வேண்டும். இவ்விதமாக இயேசு, அடிப்படைக் குடியுரிமைக் கடமைகளை[49] நிறைவேற்றுதல் என்பது தேவனுக்கு முற்றிலுமாக உடன்படிக்கை ஏற்படுத்துதலுடன் சீரற்றதன்மையில் இருப்பதில்லை என்பதைக் காண்பித்தார். அவரைக் கேள்விகேட்டவர்கள் இவ்விரு கடமைகளையும் நிறைவேற்ற முடியும் மற்றும் அவ்வாறே நிறைவேற்ற வேண்டும் என்று அவர் சுட்டிக்காண்பித்தார்.

அந்த இளம் கல்வியாளர்கள் "அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம் பிடிக்கக்கூடாமல்" இருந்தனர் (லூக். 20:26அ). அவர்கள் "அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டனர்" (லூக். 20:26ஆ; மத். 22:22அ-வைக் காணவும்). பரிசேயர்கள் ஒருவேளை, இயேசுவைச் சிறுமைப்படுத்தியிருந்திருக்கலாம், எனவே அவர்களின் சீஷர்கள் அவருடைய அறிவுநுட்பம் மற்றும் ஞானம் ஆகியவற்றினால் திகைப்புற்றனர். மவுனமாக (லூக். 20:26இ), "அவர்கள் அவரை விட்டுப் போய் விட்டார்கள்" (மத். 22:22ஆ).

## முடிவுரை

"கேள்விகளின் மாபெரும் நாள்" பற்றிய நமது படிப்பானது, நமது அடுத்த பாடத்திலும் தொடரும், ஆனால் அந்த இருபத்து நான்கு மணிநேரத்தின் முடிவில் இயேசுவின் விரோதிகள் "என்ன ஒரு நாள்!" என்று பெருமூச்சுவிட நிர்ப்பந்திக்கப்பட்ட வேளையில், அவரால் "என்ன ஒரு நாள்!" என்று கூறியிருக்க முடிந்தது ஏன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளப் போதுமான அளவு விஷயங்களை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். பரிசேயர்களின் சீஷர்களைப் போலவே, நானும்கூட, கிறிஸ்து அந்த விசேஷித்த செவ்வாய்க்கிழமையன்று தமது விரோதிகளை எவ்வாறு கையாண்டார் என்பதை வாசிக்கும்போது, எப்போதுமே "திகைப்படைகின்றேன்."

நீங்கள் எப்படிப்பட்ட ஒரு நாளைக் கொண்டிருந்துள்ளீர்கள் என்பதை நான் அறிவதில்லை, ஆனால் நீங்கள் "என்ன ஒரு நாள்" என்று (சங்கடத்துடன்) கூறுவதற்குப் பதிலாக, "என்ன ஒரு நாள்!" என்று (மன நிறைவுடன்) கூறமுடியும் என்று நான் நம்புகின்றேன். தேவன் நம்முடன் இருக்கின்றார் என்று நாம் அறிகின்ற வரையிலும், நாம் சங்கீதக்காரருடன் சேர்ந்து, "இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" என்று கூறமுடிபவர்களாய் இருக்க வேண்டும் (சங். 118:24).

*குறிப்புகள்*

*[1]ஒரு வகுப்பமைவில் இந்தப் பாடம் பயன்படுத்தப்பட்டால், வகுப்பில் உள்ளவர்கள் எப்படிப்பட்ட நாளைக் கொண்டிருந்தனர் என்று கூறுவதற்கு ஒரு சில நிமிடங்களை எடுத்துக்கொள்ளுதல் பொருத்தமானதாக இருக்கும். [2]கிறிஸ்துவின் ஊழியத்தில் வேலை மும்முரமான இன்னொரு நாளைப் பற்றிய விவரங்களுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் "ஒரு வேலை மும்முர மான நாள்'' என்ற பாடத்தைக் காணவும். [3]ஒரு நாளில் எல்லாம் நடந்திருக்க முடியாது என்று சிலர் முடிவு செய்திருக்கும்படியாக, இந்த நாளுக்குள் ஏராளமான விஷயங்கள் பொதியப்பட்டுள்ளன. கிறிஸ்துவைப் பற்றிய ("அவர் யாருடைய குமாரன்?" என்ற) கேள்வியில் இருந்து எருசலேமின் அழிவு மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய அவரது போதனை வரையிலான நிகழ்ச்சிகள் புதன்கிழமை காலை வேளையில் நடந்தன என்று அவர்கள் நினைக்கின்றனர். நமது வரைக்குறிப்பில் நாம், இந்த நிகழ்ச்சிகள் யாவற்றையும் செவ்வாய்க்கிழமையன்று நடந்ததாகக் குறிப்பிட்டுள்ளோம், ஆனால் அது தனிச்சிறப்பான விஷயமாக இருப்பதில்லை. [4]எல்லா நிகழ்ச்சிகளும் செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றன என்ற யூகத்தில் (முந்திய குறிப்பைக் காணவும்), கர்த்தருடைய வாழ்வின் வேறு எந்த நாளைக் காட்டிலும் இந்த ஒரு நாளில் மிக அதிகமான போதனை இருந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனலாம். [5]இந்தப் பாடத்தில் உள்ளவற்றில் பெரும்பாலான போதனைகள் இயேசுவின் விரோதிகளை நோக்கியவையாக இருந்த போதிலும், அவர் தம்மைச் சுற்றிலுமிருந்த கூட்டத்தாரால் கவனித்துக் கேட்கப்பட்டார் (லூக். 20:9, 16ஐக் காணவும்). இந்தப் போதனைகளில் நம் யாவருக்கும் அவசியமான பாடங்கள் இருப்பதால் இவைகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. [6]அவர் அநேகமாக, புறஜாதியாரின் மண்டபத்தில் போதித்துக் கொண்டு இருந்திருக்கலாம், ஒருவேளை சாலொமோனின் மண்டபத்தில் அவர் போதித்துக் கொண்டு இருந்திருக்கலாம் (யோவா. 10:23; அப். 3:11ஐக் காணவும்). தேவாலய வரைபடத்தை கிறிஸ்துவின் வாழ்வு, ஒன்றும் புத்தகத்தில் காணவும். [7]"சுவிசேஷம்" என்ற வார்த்தை ''நற்செய்தி'' என்று அர்த்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் போதிக்கப்பட்ட "சுவிசேஷம்" என்பது அநேகமாக, இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்ற நற்செய்தியாக இருக்கலாம் (மாற். 1:15). [8]வெற்றிப் பிரவேசம் என்பது கண்ணோக்கக் கருத்தின்படியாக, ஒரு ''கூச்சல் மிகுந்த செயல்விளக்கமாக'' இருந்திருக்கும். தேவாலயத்தைச் சுத்திகரித்தல் மற்றும் வெற்றிப் பிரவேசம் ஆகியவை பற்றி "கிறிஸ்துவின் வாழ்வு 5" -ம் புத்தகத்தில் உள்ள "தவறவிடப்பட்ட வாய்ப்புகள்" என்ற பாடத்தைக் காணவும். [9]*J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 586. *[10]இயேசுவைப் பற்றிய யோவானின் சாட்சியம் குறித்து கூடுதலான குறிப்புகளுக்கு, யோவான் 1:6, 7, 15, 36; 3:26-36; 10:40-42 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.*

*[11]அந்த செவ்வாய்க்கிழமையன்று இயேசு பல உவமைகளைப் போதித்தார். இந்த உவமைகள் சிலவேளைகளில், "உவமைகளின் மூன்றாவது பெரும் தொகுதி" என்று அழைக்கப்படுகின்றன. [12]அடிக்கடி கூறப்பட்டுள்ளபடி, ''உவமை'' என்ற சொற்றொடரானது பேச்சின் பல்வேறு உருவகங்களைக் குறிப்பிடுவதற்கு வேதாகமத்தில் தளர்வாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. [13]கீழ்ப்படிந்த மகன் மற்றும் கீழ்ப்படியாத மகன் ஆகியோரின் எடுத்துரைப்பு வரிசை முறைமையைச் சில கையெழுத்துப் பிரதிகள் மாற்றிப் போட்டுள்ளன. இது செய்தியை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. [14]பதில் அளித்தவர்கள், யோவானை விசுவாசிக்காதிருந்தனர் என்று இயேசு குற்றம் சாட்டினார் (மத். 21:32). எனவே, இந்தக் கேள்வியானது யோவானை*

மாபெரும் கனத்திற்குரியவராக நினைத்திருந்த கூட்டத்தாரை நோக்கியல்ல (மத். 21:26), மாறாக யோவானை விசுவாசியாதிருந்த மதத் தலைவர்களை (மத். 21:25) நோக்கிக் கேட்கப்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். இயேசுவைக் குறித்து யோவான் கூறியவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளாதிருந்த மற்றவர்களும் அங்கிருந்தனர், எனவே அதிகம் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டையும் ஏற்படுத்த முடியும். [15]"உங்களுக்கு முன்னே" என்பது, யூதத் தலைவர்கள் தாமாகவே ராஜ்யத்தில் பெயரெழுதப்பட்டவர்களைப் பின்பற்றுவார்கள் என்று அர்த்தப்படுவதில்லை. அவர்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால், வரிவசூலிப்பவர்கள் மற்றும் (முன்னாள்) வேசிகள் ஆகியோருக்குரிய பின்வரும் அதே நிபந்தனையின்படியே பிரவேசித்தாக வேண்டும்: அவர்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டு தங்கள் பாவம் நிறைந்த தன்மையிலிருந்து மனந்திரும்ப வேண்டும். [16]அவர்கள் கூட்டத்தைக் கலக்கப்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக, தாங்கள் யோவானை விசுவாசித்திருந்ததில்லை என்பதை ஒப்புக்கொள்ள மறுத்தனர் (மத். 21:25, 26), ஆனால் எப்படியும் இயேசு, அவர்கள் யோவான்மீது கொண்டிருந்த விசுவாசக் குறைவை வெளிப்படுத்தினார். [17]யூதத்தலைவர்கள் இன்னமும் அங்கிருந்தனர் (மத். 21:45). [18]McGarvey and Pendleton, 591. [19]மத்தேயு 21:33ல் இயேசு, ஏசாயா 5:1, 2ல் இருந்து மேற்கோள் காண்பித்தார், இது இஸ்ரவேல் நாட்டைக் குறிப்பிடுவதாக இருந்தது. [20]மத்தேயு சுவிசேஷ விவரத்தில் அடிமைகளில் ஒருவர் கல்லெறியப்பட்டார் (மத். 21:35).

[21]Walter W. Wessel and William L. Lane, notes on Book of Mark, *The NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1518. [22]இதை எழுதியபோது நான் வாழும் இடத்தில் நாங்கள், "மூளையை உபயோகிக்க அவசியமில்லாதது" என்று கூறுவதுண்டு. [23]"கனி" = தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்வின் "உற்பத்திப் பொருள்'' (விளைவு) (யோவா. 15:1-10; ரோமர் 7:4; கலா. 5:22, 23). [24]''அப்படியாகாதிருப்பதாக!" என்பது கிரேக்கமொழியிலிருந்து மிகச்சரியாக மொழிபெயர்க்கப்பட்ட கூற்றாக உள்ளது, ஆனால் இது இவ்வார்த்தைகளில் மறைந்துள்ள ஊக்கமான அர்த்தத்தில் குறைவுபடுகிறது. KJVயும் RSVயும், மெக்கார்வீ அவர்கள் "the semi-profane expression" என்று அழைக்கும் "தேவன் தடை செய்வாராக'' என்ற சொற்றொடரைக் கொண்டு இந்த ஊக்கத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றன (McGarvey and Pendleton, 593). மனச்சாட்சியுள்ள எந்த யூதரும் தேவனுடைய நாமத்தை இவ்வளவு இலகுவாகப் பயன்படுத்துவார்கள் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. மாறாக, "அப்படியாகாதிருப்பதாக!" என்ற சொல்லாக்க மானது பலவீனமானதாக உள்ளது, ஆனால் இதுவே நாம் மிகச்சிறந்த வகையில் செய்யக்கூடியதாக இருக்கலாம். [25]இந்தத் தீர்க்கதரிசனம் தொடக்க கால சபையில் மிகவும் பிரியத்துக்கு உரியதாக ஆயிற்று (அப். 4:11; ரோமர் 9:33; 1 பேது. 2:7). சங்கீதம் 118:22ன் மீதான ஒரு கலந்துரையாடலுக்கு "அப். நடபடிகள், 1" என்ற புத்தகத்தில் காணவும். [26]Lewis Foster, notes on the Book of Luke, *The NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1579. [27]மெக்கார்வீ அவர்கள், அங்கிருந்தவர்களில் ஒரு சிலர் ''முரட்டுத் தைரியம் கொண்ட கலிலேய மனிதர்களாயிருந்திருக்க வேண்டும், அவர்கள் இயேசுவின் சார்பாகப் பட்டயங்களை உருவத் தயாராக இருந்தனர்'' என்று கருத்துத் தெரிவித்தார் (McGarvey and Pendleton, 595). [28]அந்த உவமையின்மீதான ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் உள்ள "எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்" என்ற பாடத்தைக் காணவும். [29]இந்த உவமையின் மீதான அதிக விவரமான கலந்துரையாடலுக்கு, இந்தப் புத்தகத்தில் உள்ள "அரசரிடமிருந்து ஒரு அழைப்பு!" என்ற பாடத்தை காணவும். [30]இது உண்மையாயுள்ளது என்ற

*யூகத்தில், இந்த உவமையானது, அரசர் தமது சேனைகளை அனுப்புதல் பற்றிப் பேசுகையில், ரோமச் சேனைகளே எருசலேமை அழித்தன என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. தேவன் சிலவேளைகளில், தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவபக்தியற்ற (அசீரியா அல்லது பாபிலோன் போன்ற) சக்திகளைப் பயன்படுத்தினார் என்று பழைய ஏற்பாடு போதிக்கிறது (ஏசா. 10:5; 13:5; எரேமி. 25:9; எசே. 29:17-20 ஆகிய வசனங்களைக் காணவும்).*

[31]F. F. Bruce, *The Hard Sayings of Jesus* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1983), 206-7. [32]Ibid., 207. [33]*இதையே அவர்கள் கடைசியில் செய்தார்கள். அந்த வேளையில் பொந்தியு பிலாத்து என்பவர் ரோம ஆளுநராக இருந்தார்.* [34]A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 164. [35]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 193; McGarvey and Pendleton, 597. [36]*ஏரோதியர்களைப் பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பிற்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்.* [37]*பரிசேயர்களுக்கும் ஏரோதியர்களுக்கும் இடையில் ஒரு கூட்டுச் சதித்திட்டம் இருந்ததற்கான முந்திய குறிப்பு ஒன்று இருந்தது: மாற்கு 3:6. மாற்கு 3:6ன் மீதான விளக்கவுரைகளுக்கு ''கிறிஸ்துவின் வாழ்வு, 2'' என்ற புத்தகத்தில் காணவும்.* [38]*அவர்கள் பேசிய வார்த்தைகள் உண்மையாயிருந்த போதிலும், அவர்களின் வாய்களில் முகஸ்துதியாகவே இருந்தது (1) ஏனென்றால், அவர்கள் அவைகளை நம்பவில்லை மற்றும் (2) ஏனென்றால் அவற்றைப் பேசுவதில் அவர்கள் ஒரு மறைமுகமான நோக்கங்கொண்டிருந்தனர் (மத். 22:18ஐக் காணவும்).* [39]*மூலக்கருத்தில், ''இராயன்'' என்ற சொற்றொடர் (ஜூலியஸ் சீசர்) யூலியு இராயனைக் குறித்திருந்தது, ஆனால் அது ரோமப் பேரரசர் எவருக்கும் ஒரு பட்டப் பெயராகி இருந்தது.* [40]*வில் எட் வார்ரென் அவர்களின் கருத்துப்படி, "எருசலேமின் அழிவானது ஒரு பகுதி, வரிகள் செலுத்தும் விவகாரத்தினால்தான் நடைபெற்றது"* (Will Ed Warren, Class Syllabus, *The Life of Christ: The Synoptic Gospels*, Harding University, 1991, 91).

[41]"Poll-tax" *என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, ''மக்கள் தொகைக் கணக்கீட்டின்'' அடிப்படையில் விதிக்கப்பட்ட ஒரு "வரி"யாக இருந்தது* (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons Ltd., 1971], 230). KJV*யில்* "tribute" *என்றுள்ளது.* [42]Warren, 91. [43]*பிற்பாடு இயேசு பிலாத்துவிடம் கூட்டிக்கொண்டு வரப்பட்டபோது, ''இராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்று'' கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டார் (லூக். 23:2), ஆனால் இந்தப் பொய்யான குற்றச்சாட்டு அந்த விசாரணையில் கனம் எதையும் கொண்டிருந்ததில்லை என்பது உறுதி.* [44]*அவர்கள் ''அவரிடத்தில் வரிப்பணம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள்'' என்ற உண்மையானது, அப்படிப்பட்ட ஒரு நாணயம் அவர்களிடம் தயாராக இருக்கவில்லை என்று சுட்டிக்காண்பிக்கலாம். ஒவ்வொருவரும் தனது பையில் தட்டுத் தடுமாறித் தேடிக்கொண்டு, "உங்களிடம் ஒரு தினேரியம் உள்ளதா?" "இல்லையே, உங்களிடம் உள்ளதா?" என்று கேட்டுக் கொண்டிருந்ததை எனது மனதில் காட்சியாகக் காணமுடிகிறது.* [45]*முன்பே அடிக்கடி குறிப்பிடப்பட்டபடி, ஒரு தினேரியம் என்பது சாதாரணத் தொழிலாளிக்கு ஒரு நாளுக்கான கூலியாக இருந்தது (மத். 20:2, 9).* [46]*அதில் இருந்த மேலெழுத்தை, "திபேரியு இராயன், தெய்வீகத்துவமான அகுஸ்துவின் மகன் அகுஸ்து'' என்றும் வாசிக்க முடியும். இந்தத் தகவலில் பெரும்பான்மையானது* McGarvey and Pendleton, 599 *அவர்களின் புத்தகத்தில் இருந்து வருகிறது.* [47]*சட்டப்படி, ஒவ்வொரு நாடும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டு, அரசாங்கத்தின் உடைமையாகவே உள்ள நாணயம் மற்றும் பணத்தாள்களைப் பயன்படுத்துகிறது.* [48]*இயேசுவின்*

*வார்த்தைகள், அந்த மேலெழுத்தில் இருந்த (தெய்வீக அகுஸ்து) என்ற விக்கிரகாராதனைத் தனமான உரிமைகோருதலுக்கு ("தெய்வீகத்துவமான அகுஸ்து" என்பதற்கு) மறைமுகமான மறுப்பைக் கொண்டிருந்தன. அந்த நாணயத்தில் இராயனுடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது, அது இராயனுக்குக் கொடுக்கப்படக்கூடும், ஆனால் நாம் யாவரும் தேவனுடைய சாயலில் உருவாக்கப் பட்டுள்ளோம் (ஆதி. 1:26, 27) மற்றும் நாம் அவருக்கு (தேவனுக்கு) மாத்திரமே அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். [49]குடியுரிமை அரசுகளுக்குக் கிறிஸ்தவர்களின் பொறுப்பு மீதான திறவுகோல் வசனங்கள் பின்வருமாறு: ரோமர் 13:1-7; 1 தீமோத்தேயு 2:1, 2; தீத்து 3:1, 2; 1 பேதுரு 2:13-17.*